IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.02/2020**

Deposition PW 1 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 27.11.2023 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.பாக்கியம்மா | Husband's Name : | திரு.நாராயணப்பா |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | 40 |
| வா.சா. : | 1 | | |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:**

1) நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வாதுரை மற்றும் எனது சத்தியபிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றாலும், அவை நான் கூறிய விவரங்களின் அடிப்படையில்தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எனது வாதுரையிலும் சத்தியபிரமான வாக்குமூலத்திலும் எனது வயது 40 என்று குறிப்பிட்டுள்ளேன் சரிதான். என்னுடைய பிறந்த தினம் எனக்கு தெரியாது. எந்த வருடம் நான் பிறந்தேன் என்ற விவரமும் எனக்கு சரியாக தெரியாது. எனது ஆதார் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் எனது வயது 40 என்று தெரிவித்துள்ளேன். எனது மூத்த சகோதரரான இவ்வழக்கின் 1 ஆம் வாதி திரு.ராமசந்திரா என்பவர் தான் எனது ஆதார் அடையாள அட்டையில் உள்ள விவரங்களை தெரிவித்தார்.

2) என்னுடைய தயார் பெயர் திருமதி.பீரம்மா ஆகும். ஆனால் வாதுரையுடன் தாக்கல் செய்துள்ள வாரிசு விவர பட்டியலில் எனது தயார் பெயர் திருமதி.முனிபீரம்மா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாரின் பெயர் குறித்து முறண்பட்டு விவரங்களை இவ்வழக்கில் தெரிவித்துள்ள காரணத்தினால், எனக்கு எனது தாயாரின் பெயர் சரியாக தெரியாது என்றால் சரிதான், எனது தாயாரை நான் பார்த்ததுகிடையாது. எனது தாயாருக்கு எந்த தேதி, மாதம், வருடம் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. மேலும் தாயாருக்கு எந்த தேதி, மாதம்,

வருடம் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்ற விவரத்தை எனது வாதுரையிலும் சத்தியபிரமான வாக்குமூலத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

3) **எனது தாயாரின் வாரிசு நான் என்று நிருபிப்பதற்குரிய வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். மேலும் எனது தாயாரின் திருமண புகைப்படத்தை இவ்வழக்கில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கு மூன்று பெயர்கள் உண்டு அவை திரு.முனியப்பா, திரு.பெத்தசின்னப்பா மற்றும் திரு.திருச்சின்னப்பா ஆகும். எனது தந்தை உயிருடன் தான் உள்ளார். ஆனால் எனது வாதுரையில் எனது தந்தை இறந்துவிட்டதாக தான் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறான விவரம் ஆகும்.**

4) **நான் இவ்வழக்கினை மூன்று நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன் அவர்கள் பெயர்கள் திரு.தொட்டசின்னப்பா, திருமதி.ரத்னா மற்றும் திருமதி.சாமலா ஆகும். திரு.முனியப்பாவிற்கு** 1 **முதல்** 3 **பிரதிவாதிகள் தவிற வேறு வாரிசுகள் கிடையாது. இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எவ்வித ரத்த பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எனது மூத்த சகோதரர்ரான இவ்வழக்கின்** 1 **ஆம் வாதி திரு.ராமசந்திராவின் தூண்டுதலில் தான் பிரவாதிகளுக்கு உரிமைப்படட சொத்துகளை எவ்வித உரிமையுமின்றி அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்ய தக்கது என்றாலும் சரியல்ல.**

<u>பிரவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR